# தூயி தசம பகுப்பாக்க அடிப்படையில் மெய்யியல் பாடவிதான நூல்களை ஒழுங்கமைத்தல் பற்றியதோர் பகுப்பாய்வு

கலாநிதி. (திருமதி) மைதிலி விசாகரூபன்[1],
திரு. பொன்னுத்துரை பூலோகநாதன்[2]

**ஆய்வுச்சுருக்கம்**

நூலகங்கள் தனக்குரிய தகவல் சாதனங்களைச் சேகரித்தலிலும், அதனைச் சீரான முறையில் ஒழுங்கமைத்தலிலும் அதிக கவனம் செலுத்துகின்றன. நூலக தகவல் சாதனங்களின் நேர்த்தியான ஒழுங்கமைப்பு மூலமே அதனைச் சரியான முறையில் பயன்படுத்த முடியும். நூலகங்களில் தகவல் சாதனங்கள் சரியான முறையில் பகுப்பாக்கம் செய்யப்படவில்லை எனின் தகவல் வளங்களை அணுகுவதிலும் மீட்டெடுப்பதிலும் சிரமங்கள் எதிர்நோக்கப்படலாம். நூலகங்களில் தகவல் சாதன ஒழுங்கமைப்பிற்கான விதிமுறைகளைக் குறிப்பிடும் கருவி நூல்கள் பல பயன்பாட்டில் உள்ள போதிலும் பெரும்பாலும் இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளில் *தூயி தசம பகுப்பாக்க திட்டத்தின் 23ம் பதிப்பு* பயன்படுத்தப்படுகிறது. *(Dewey Decimal Classification – 23rd Edition)* இங்கு ஒவ்வொரு பாடநெறிகளுக்குமாக 000 - 999 வரையிலான எண்கள் குறியீடுகளாகப் பயன்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் மெய்யியல் பாடவிதானம் சார்ந்த நூல்கள் 100-199 எனும் பகுதியில் விளக்கப்படுகிறது. இவ்வாறு தூயி தசம அடிப்படையில் 100-199 வரையிலான மெய்யியல்சார் நூல்களைப் பகுப்பாக்கம் செய்கையில் சில தெளிவின்மை காணப்படுகின்றன. குறிப்பாக, குறித்த ஓரிடத்தில் இறாக்கைப்படுத்துவதற்காகக் குறிப்பிடப்படும் தகவல் சாதனங்கள் மற்றுமொரு இடத்திலும் இறாக்கைப்படுத்துவதற்கு ஏதுவான முறையில் நெகிழ்ச்சித் தன்மை *னுனுஊ* யில் காணப்படுகிறது. எனவே இவ்வாய்வானது இவ்வாறான தெளிவில்லாத சந்தர்ப்பங்களை வெளிப்படுத்திக் காட்டுவதுடன் இவ்வாறான தகவல் சாதனங்களை நூலகத்தில் எந்த இடத்தில் இறாக்கைப்படுத்துவதனூடாக சரியான பயனை மெய்யியல் துறைசார்ந்த வாசகர் பெறமுடியும் என்பதனைத் தெளிவுபடுத்திக் காட்டுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது. இவ்வாய்வுக்காகப் பகுப்பாய்வு முறை, விபரண முறையியல் மற்றும் ஒப்பீட்டாய்வு முறை என்பன பயன்படுத்தப்படுவதுடன் இவ்வாய்வுக்கு வேண்டிய தரவுகள் யாவும் முதன்நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பெறப்பட்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:** தகவல்சாதனம், தூயிதசம பகுப்பாக்கம், மெய்யியல் பாட விதானம், நூலக பகுப்பாக்கம், இறாக்கைப்படுத்தல்.

---

[1] *சிரேஷ்ட உதவி நூலகர், நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். ORCID ID 0000-0001-5878-8011 mvisakaruban@yahoo.com*

[2] *உதவி நூலகர், நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். ORCID ID 0000-0002-7084-5688 poologan@univ.jfn.ac.lk*

# The Organizing of Philosophical curriculum texts based on *Dewey decimal classification System*- An analytical study.

**Abstract**

Libraries focus on collecting and streamlining their own information sources. It can be used properly only through the neat arrangement of library information sources. Libraries are difficult to use because information sources are not properly analyzed. *Edition 23 of the Dewey Decimal Classification* is mostly used in eastern countries such as Sri Lanka, despite the fact that a number of instrumental texts on the organization of information sources in libraries are in use. In the *Dewey decimal classification*, numbers 000 - 999 are used as notations for each subject. Philosophical syllabus texts are explained in this way in notations 100-199. Thus some ambiguity is found in the analysis of Philosophical texts from 100-199 in *Dewey Decimal Classification*. In particular, *DDC 23 edition* is designed to be flexible enough to be shelved from one location to another. Therefore, this study reveals such ambiguous situations and makes it clear that the reader can get the enough benefit by shelving such information sources anywhere in the library. The analytical method, descriptive method and comparative method are used for this study and all the data required for this study are obtained as primary and secondary data and the analysis is designed.

Keywords: Information sources, Dewey Decimal Classification, Philosophical Curriculum, Library classification, shelving.

## அறிமுகம்

நூலகம் ஒன்று தனது வாசகர்களுக்குச் சரியான தகவல்களை வழங்குவதற்கு ஏதுவாக அங்கு காணப்படும் தகவல் சாதனங்களைச் செம்மையான முறையில் ஒழுங்குபடுத்துவது அவசியமாகும். எனவே நூலகங்கள் தமது தகவல் சாதனங்களைச் சரியான முறையில் பகுப்பாக்கம் செய்வதற்குத் *தூயி தசம பகுப்பாக்கம் (DDC)*, காங்கிரஸ் நூலக பகுப்பாக்கம் *(LCC)*, கோலன் பகுப்பாக்கம் *(CC)*, சர்வதேச தசமப் பகுப்பாக்கம் *(UDC)* போன்ற கருவி நூல்களை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாக்கம் செய்கின்றன. இவ்வகையில் இலங்கை போன்ற நாடுகளில் *தூயி தசம பகுப்பாக்கம் (DDC)* பயன்படுகின்றது.

நூல்களைப் பகுப்பாக்கம் செய்வது என்பது, நூல்களின் உட்பொருளின் அடிப்படையில் அவ்வப் பாடத்துறை சார்ந்த நூல்களை ஓரிடத்தில் இறாக்கைப்படுத்தி அமைக்கும் ஓர் செயற்பாடாகும். நூல்கள் அதிகமாகக் காணப்படும் ஆய்வுசார் நூலகங்களில் சிரமமின்றியும், நேரகால தாமதமின்றியும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு இந்நூற் பகுப்பாக்க முறைகள் பெரிதும் உதவுகின்றன. தூயிதசம பகுப்பாக்க முறையானது இவ்வுலகில் காணப்படும் அறிவுத் தொகுதிகள் யாவற்றையும் பத்து (10) பெரும் பிரிவுகளுக்குள் உள்ளடக்குகின்றன. அவை முறையே 000 – 999 வரையானதாகும். (Dewey,2011)

000 – 099 வரையில் பொதுவான விடயங்கள் சார்ந்த நூல்கள் பகுப்பாக்கம் செய்யப்படுகின்றன.

100 – 199 வரையில் - தத்துவம் சார்ந்த நூல்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

200 – 299 வரையில் - சமயம் சார்ந்த நூல்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

300 – 399 வரையில் - சமூகஅறிவியல் (Social Science) சார்ந்த நூல்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

400 – 499 வரையில் - மொழிசார்ந்த விடயங்களைக் குறிப்பிடும் நூல்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

500 – 599 வரையில் - அறிவியல் (Science) சார்ந்த நூல்கள் பகுப்பாக்கம் செய்யப்படுகின்றன.

600 – 699 வரையில் - தொழிநுட்பம் சார்ந்த விடயங்களைக் குறிப்பிடும் நூல்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

700 – 799 வரையில் - கலை சார்ந்த விடயங்களைக் குறிப்பிடும் நூல்கள் ஒழுங்கமைக்கப் படுகின்றன.

800 –899 வரையில் - இலக்கியம் சார்ந்தநூல்கள் இப்பகுதியில் ஒழுங்கமைக்கப் படுகின்றன.

900 – 999 வரையில் - வரலாறு மற்றும் புவியியல் சார்ந்த நூல்கள் வகைப்படுத்தப் படுகின்றன.

இவ்வகையில் ஒரு நூலகத்தின் மெய்யியல் பாடவிதானம் சார்ந்த நூல்கள் தூயி தசம பகுப்பாக்க திட்டத்தின் 100 – 199 வரையான வகுப்பெண்களுக்குள் உள்ளடக்கப்படுகின்றன. இவற்றுள்

100 எனும் வகுப்பெண்ணில் -பொதுவான மெய்யியல் சார்ந்த விடய நூல்கள் உள்ளடக்கப்படுகின்றன.

110 - பௌதீகவதீதம் (Meta- Physics) சார்ந்த நூல்களும்

121 - அறிவாராய்ச்சியியல் (Epistemology) சார்ந்த நூல்களும்

142 - விமர்சன மெய்யியல் (Critical Philosophy) சார்ந்த நூல்களும்

150 - உளவியல் (Psychology) சார்ந்த நூல்களும்

160 - அளவையியல் (Logic) சார்ந்த நூல்களும்

170 -ஒழுக்கவியல் (Ethics ) சார்ந்த நூல்களும்

181 - கீழைத்தேய மெய்யியல் (Eastern Philosophy) சார்ந்த நூல்களும்

182 - சோக்கிரட்டீசுக்கு முன்னைய காலம் (Pre - Socratic Philosophy) சார்ந்த நூல்களும்

183 - கிரேக்க மெய்யியல் (Greek Philosophy) சார்ந்த நூல்களும்

189 - மத்தியகால மெய்யியல் (Medieval Philosophy) சார்ந்த நூல்களும்

190 - நவீனகால மெய்யியல் (Modern Philosophy) சார்ந்த நூல்களும்

வகைப்படுத்தப்பட்டுள்ளன. ( Dewey, 2011)

இவ்வாறாக மெய்யியல்சார் இலக்கியங்களுக்கு பகுப்பாக்க குறியீடுகள் வழங்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பகுப்பாக்கம் செய்யப்படுகின்ற பொழுது அங்கு சிலசில இடங்களில் தெளிவின்மையும் எந்தக் குறியீட்டின் கீழ் ஒழுங்கமைப்பது அதிக பயனுள்ளது என்ற பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. குறிப்பாக மெய்யியல் பாடவிதானம் சார்ந்த சில விடயங்கள் சமயம் சார்ந்த விடயப்பரப்பினுள்ளும் (200 - 299) பொருந்துகின்றன.

கார்ல் மாக்சினால் (Karl Marx) முன்வைக்கப்பட்ட சிந்தனைகளை வகைப்படுத்துவதற்கு சமூகவியல் எனும் பகுதியின் 335.4112 எனும் வகுப்பெண் குறிப்பிடப்படுகின்றது. அதேவேளை 146.32 எனும் வகுப்பெண்ணானது மாக்சினது தத்தவ சிந்தனைகளைக் குறிப்பிடும் ஆவணங்களை ஒழுங்கமைப்பதற்காக மெய்யியல் பாடத்துறையின் கீழ் குறிப்பிடப்படுகிறது. இங்கு மாக்சிய சிந்தனைகளை 335.4112 என்ற பகுப்பெண் இல் சமூகவியல் சார்ந்த விடயங்களைக் குறிப்பிடும் பகுதியில் ஒழுங்குபடுத்த வேண்டுமா? அல்லது 146.32 எனும் வகுப்பெண்ணில் மெய்யியல் சார்ந்த பகுதியில் ஒழுங்குபடுத்த வேண்டுமா? என்பது போன்ற பிரச்சினைகளும் தெளிவின்மைகளும் காணப்படுகின்றன. எனவே இவ்வாய்வானது இவ்வகையான பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவதுடன் இதுபற்றிய சரியானதோர் தெளிவினை ஏற்படுத்தி இவ்வாறான பிரச்சினைகளுக்கு நடைமுறைசார் தீர்வினை வழங்குவதாக அமைகிறது.

## ஆய்வின் நோக்கம்

நூலகங்களில் தூயி தசம பகுப்பாக்கத் திட்டத்தின் அடிப்படையில் 100 - 199 வரையிலான பகுப்பு எல்லைக்குள் மெய்யியல்சார் பாடநூல்களைச் சரியான முறையில் ஒழுங்கமைப்பதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். அத்துடன் எந்த பகுப்பெண்ணின் கீழ் தகவல் மூலங்களை ஒழுங்குபடுத்துவதனூடாக வாசகர் அதன் பயன்பாட்டினைச் சரியான வகையில் பெற முடியும் என்பதனை சிபாரிசு செய்வதும் இவ்வாய்வின் உப நோக்கமாக அமைகின்றது.

## ஆய்வுப் பிரச்சினை

தூயி தசம பகுப்பாக்க முறையின் 23ம் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டு பாட நூல்களை ஒழுங்கமைக்கும் போது அதிலும் குறிப்பாக மெய்யியல்சார் நூல்களை இறாக்கைப்படுத்தும்

போது குறிப்பிடத்தக்களவிலான விடயங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பகுப்பிலக்கங்களின் கீழ் ஒழுங்கமைக்கக்கூடியவாறு நெகிழ்வுப்போக்கினை இப் பகுப்பாக்க திட்டமானது கொண்டிருப்பதனால் தகவல் ஒழுங்கமைப்பின்போது எவ்வெவ் வகுப்பிலக்கங்களின் கீழ் நூலக ஆவணங்களை ஒழுங்கமைப்பது பயன்பாடுள்ளதாக அமையும் என்பதை தீர்மானிப்பதில் சில தெளிவின்மைகள் காணப்படுகின்றன. இப்பிரச்சினையை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வின் கருதுகோள்

தூயி தசம பகுப்பாக்க திட்டத்தின் 23ம் பதிப்பினை அடிப்படையாக கொண்டு மெய்யியல்சார் தகவல் மூலங்களை நூலகங்களில் ஒழுங்கமைக்கின்ற பொழுது சில தெளிவின்மைகளும்இ கூறியது கூறல் சார்ந்த பிரச்சினைகளும் அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் தகவல் மூலங்களை ஒழுங்கமைக்க கூடியவாறான வகையில் சிற்சில நெகிழ்வுத் தன்மைகள் தூயி தசம பகுப்பாக்க திட்டத்தில் காணப்படுவதாக குறிப்பிடலாம்.

## ஆய்வின் வரையறை

தூயி தசம பகுப்பாக்கத்திட்டத்தில் 000 - 999 வரையிலான இலக்கங்களினூடாக விடய ஒழுங்கமைப்புப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பினும் இவ்வாய்வானது 100 - 199 வரையிலான மெய்யியல்சார் இலக்கியங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாக அமைகின்றது. தேவை ஏற்படுமிடத்து ஏனைய பாடத்துறைக்குரிய பகுப்பு எண்களும் ஆங்காங்கு பயன்படுத்தப்படுகின்றன.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பகுப்பாய்வு முறை (Analytical Method) மற்றும் விமர்சன ரீதியாக ஆய்வினை மேற்கொள்வதற்கு விபரண முறையியல் (Descriptive Method) மற்றும் ஒப்பீட்டாய்வு முறை (Comparative Method) என்பவற்றைப் பயன்படுத்துவதுடன் இவ்வாய்வுக்குரிய தரவுகள் யாவும் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளாகப் பெறப்பட்டு ஆய்வு வடிவமைக்கப்படுகிறது. முதல்நிலை தரவு மூலங்களாகஇ

DDC 22$^{nd}$ edition

DDC23$^{rd}$ edition

Library of Congress Subject Heading

Sears List of Subject Headings என்பன பயன்படுத்தப்படுவதுடன்

இரண்டாம் நிலை தரவுகளாக இவ்வாய்வு சார்ந்து வெளிவந்த தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் நூல் தரவுகள்,இணையத்தளத் தரவுகளைப் பயன்படுத்தி இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

## ஆய்வு தொடர்பான விவாதங்கள்

### தரவுப் பகுப்பாய்வு

தூயிதசம பகுப்பாக்கத்தின் 23ம் பதிப்பினை அடிப்படையாக கொண்டு மெய்யியல்சார் பாடவிதான நூல்களை ஒழுங்கமைக்கும் போது அதில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைச் சீர் செய்வதற்காக இத்தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**அறிவாராய்ச்சியியல் (Epistemology)**

146.72 –Agnotism (அறியொணாவாதம்)

146.73 –Skepticism (ஐயவாதம்) (Dewey, 2011)

இவ்விரு கோட்பாடுகளும் மெய்யியலின் அறிவாராய்ச்சியியல் எனும் பகுதியில் ஆராயப்படுகின்ற விடயங்களாக காணப்படுகின்றன. அறிவாராய்ச்சியியல் என்பது அறிவினை பெறும் முறை பற்றிய ஆராய்ச்சியாகும். (www.iep.utm.edu/epistemo/… ). ஐயவாதம் என்பது அறிவாராய்சியியலில் ஓர் முறையியலாகக் காணப்படுகிறது. ஒரு விடயத்தை அதிகாரத்தால் அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளாது அதனைச் சந்தேக நிலை கொண்டு நோக்கி ஐயுற முடியாத உண்மையைப் பெறுவதற்கு ஆதாரங்களை தேடும் முறைமையாக இது விளங்குகிறது. இம்முறையானது மேலைத்தேய மெய்யியல் மட்டுமன்றி கீழைத்தேய மெய்யியலாளர்களான Nagarguna, Jayaraj Bhatta மற்றும் ஜைன மெய்யியல், பௌத்த மெய்யியல்களோடு தொடர்புபட்டதாக விளங்குகிறது.

Agnotism (அறியொணாவாதம்) என்பது ஐயவாதத்தோடு தொடர்புபட்டதோர் கோட்பாடாக அறிவாராய்ச்சியியலில் விளங்குகிறது. இக்கோட்பாடு கடவுளின் இருப்பு, மறுபிறப்பு, ஆன்மா போன்ற விடயங்களை அறியமுடியாது என்பதனை விளக்குகிறது. மேலும் மேற்படி நம்பிக்கைகளை அறிதற்கு மனிதன் போதிய அறிவினைக் கொண்டிருக்கவில்லை இதனால் மேற்படி விடயங்களை மனித அறிவினால் விளக்க முடியாது என்பதனைக் குறிப்பிடும் கொள்கையாக அறியொணாவாதம் விளங்குகிறது. புராதன கிரேக்கத்தில் Protagoras என்பவரால் உருவாக்கப்பட்ட இவ் அறிவாராய்ச்சியியல் முறைமை நவீன மெய்யியலாளரான டேவிட்கியூமினால் சிறப்பாக வளர்த்தெடுக்கப்படுகிறது. மேலைத்தேய மெய்யியலில் மட்டுமின்றி இந்திய மெய்யியலில் இருக்கு வேத *Nasadiya Sutra* இல் அறியொணாவாதத்தின் தொடக்க சிந்தனையினைக் காண முடிகிறது. நவீன காலத்தில் டேவிட்கியூம் எனும் சிந்தனையாளரால் அறியொணாவாதக் கோட்பாடு உச்ச வளர்ச்சியை அடைந்தது. இவ்வகையில் 146.73, 146.72 போன்ற பகுதிகளில் ஐயவாதம், அறியொணாவாதம் சார்ந்த நூல்கள் வகைப்படுத்தப்பட வேண்டும் என்பதனை DDC இன் 23ம் பதிப்பு குறிப்பிடும் அதேவேளை DDC அதே பதிப்பில் 211.7 எனும் பகுதியானது Skepticism & Agnotism (ஐயவாதமும் அறியொணாவாதமும்) சார்ந்த நூல்கள் வகைப்படுத்தப்பட வேண்டிய இடமாக மீண்டும் குறிப்பிடப்படுகிறது. (Dewey,

2011). இவ்வாறு ஒரே பாடவிதானம் சார்ந்த நூல்களின் ஒழுங்கமைப்பு பற்றி இரு வெவ்வேறு இடங்களில் னுனுஊ யின் 23ம் பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளமையானது ஒரு தெளிவின்மையும் குழப்பத்தினையும் எந்த இடத்தில் இவ்வகையான நூல்களை ஒழுங்கமைப்பது எனும் புரிதலின்மையையும் பகுப்பாளருக்கு ஏற்படுத்துகின்றது.

இந்நிலையில் ஓர் பகுப்பாளர் (நூலகர்) பின்வரும் அடிப்படையில் தீர்மானத்தினை மேற் கொள்ள முடியும். Skepticism & Agnotism (ஐயவாதமும் அறியொணாவாதமும்) அறிவாராய்ச்சியியலில் இடம்பெறும் கோட்பாடுகளாகும். அறிவாராய்ச்சியியல் என்பது மெய்யியலின் ஓர் பகுதியாகும். எனவே அத்தகைய கோட்பாடுகளை சமயம் சார்ந்த பகுதியில் (வகுப்பெண் 211.7) ஒழுங்கமைப்பதை விடுத்து தத்துவவியல் சார்ந்த பகுதியில் ஒழுங்கமைப்பதே சிறப்பானதாகும். இங்கு தத்துவவியல் சார்ந்த பகுதி எனும் போது 146.73, 146.72 போன்ற வகுப்பெண்களிலும் ஒழுங்குபடுத்துவதை விடுத்து 180 போன்ற பகுப்பெண்ணில் ஒழுங்குபடுத்துவது சிறப்பானதாகும். ஏனெனில் அறிவாராய்ச்சியியல் என்பது வெறுமனே மேலைத்தேய மெய்யியலுக்கு மட்டும் உரித்தான தத்துவக் கோட்பாடு அல்ல. கீழைத்தேய (இந்திய) மெய்யியலிலும் அறிவாராய்சியியல் கருத்துக்கள் சிறப்பிடம் பெறுகின்றது. எனவே ஒரு நூலகர் Skepticism & Agnotism போன்ற விடயங்கள் சார்ந்த இலக்கியங்களை 180 மற்றும் அதன் உப பகுப்பெண் போன்றவற்றின் கீழ் ஒழுங்குபடுத்துவதனால் கீழைத்தேய மேலைத்தேய தத்துவியல் வாசகர்கள் மட்டுமின்றி சமயவியல் கற்கை வாசகர்களும் சிறப்பான பயனைப் பெற்றுக் கொள்வர்.

**மாக்சிசம்**

146.32- Dialectical Materialism of Karl Marx. (கார்ள்மாக்ஸின் இயக்கவியல் பொருள்முதல் வாதம்) பற்றிக் குறிப்பிடுகிறது. (Dewey, 2011)

335.4112- Marxism (மாக்சிசம்- தத்துவார்த்த அடிப்படைகள்) பற்றிக் குறிப்பிடுகிறது. (Dewey, 2011)

இயக்கவியல் பொருள் முதல்வாதம் என்பது கால்மாக்ஸினால் முன்வைக்கப்பட்ட ஓர் தத்துவக் கோட்பாடாகும். இது பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு முரண்பாட்டினூடாக சமூக மாற்றம் எவ்வாறு இடம்பெறுகின்றது என்பதனை விளக்குகிறது. புராதன சமூகத்தில் ஆண்டான்-அடிமை எனும் சமூக அமைப்பும் பின்னர் அதில் ஏற்பட்ட முரண்பட்ட வளர்ச்சியினால் நிலவுடைமை சமுதாயம் தோற்றம் பெறுகிறது. இங்கு பண்ணையாளன் - கூலியாள் எனும் பிரிவினையின் முரண்பாட்டால் கைத்தொழில் சமூகம் உருப்பெறுகிறது. இங்கு முதலாளி – தொழிலாளி எனும் வகுப்பினர்க்கிடையேயான முரண்பாட்னால் கம்யூனிசிய சமூகம் தோற்றம் பெறும் என்பதாக மாக்ஸ் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக மாற்றத்தை விளக்குகிறார். DDC யின் 146.32 எனும் வகுப்பெண்ணானது மாக்சினால் முன்வைக்கப்பட்ட

இயக்கவியல் பொருள்முதல் வாதம் சார்ந்த நூல்களை ஒழுங்குபடுத்தும் பகுதியாக குறிப்பிடப்படுகின்றது. (Dewey, 2011). இதேவேளை DDC யின்335.4112 எனும்வகுப்பெண்ணானது கால்மாக்சினால் முன்வைக்கப்பட்ட அனைத்து தத்துவார்த்த கோட்பாடுகளையும் ஒழுங்குபடுத்தும் பகுதியாக குறிப்பிடப்படுகின்றது. (Dewey, 2011). உண்மையில்இங்குஎழும் பிரச்சினை யாதெனில், மார்க்சினால் முன்வைக்கப்படும் இயக்கவியல் பற்றி குறிப்பிடும் நூல்களை DDC யின் 146.32 எனும் பகுதியில் ஒழுங்குபடுத்துவதா? அல்லது 335.4112 எனும் பகுப்பாக்க வகுப்பில் பொருளியல் சார்ந்த பாடநூல்களுடன் ஒழுங்குபடுத்துவதா? என்பதே ஆகும். இவ்வாறு ஒரேவகை சார்ந்த நூல்கள் இரண்டு வெவ்வேறு இடங்களில் வகைப்படுத்தக் கூடியதற்கு ஏற்றாற்போல் னுனுஊ நெகிழ்ச்சியாக அமைக்கப்பட்டிருப்பது ஓர் புரிதலின்மையினைப் பகுப்பாளர்களுக்கு ஏற்படுத்துகின்றது.

பொதுவாக மாக்சியக் கருத்துக்களை விரிவாக ஆராய்கின்ற பொழுது அவை பல்வேறு விடயங்கள் பற்றிக் குறிப்பிட்டாலும் பெரும்பாலும் பொருளியல், மற்றும் அரசியல் போன்ற பிரதான துறைகளின் கீழ் பகுப்பாக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அதேவேளை தத்துவார்த்த ரீதியாக மெய்யியல் கருத்துக்கள் மேலோங்கி இருக்கும் ஆவணங்கள் 146.32 என்னும் மெய்யியல்சார் வகுப்பெண்ணின் கீழ் ஒழுங்குபடுத்தப்படுவதே பொருத்தப்பாடுடையதாக அமையும். ஏனெனில் இவ்வாறு ஒழுங்கமைக்கும்போதே மெய்யியல்சார் வாசகர்கள் அவற்றில் காணப்படும் இத்துறைசார் கருத்துக்களை ஒப்பிட்டு ரீதியில் வினைத்திறனாக மீட்டெடுக்கக் கூடிய வாய்ப்பு காணப்படும். எடுத்துக்காட்டாகஇ ந.முத்துமோகனால் எழுதப்பட்ட *மாக்சிய கட்டுரைகள்* எனும் நூலானது பெரும்பாலான நூலகங்களில் 335.4 (Marxian System) எனும் பகுதியில் பொருளாதார விடயங்களை குறிப்பிடும் வகுப்பெண்ணில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஆனால் உண்மையில் இந்நூல் 146.32 எனும் பகுதியில் வகைப்படுத்துவது சிறப்பானது. ஏனெனில் இந்நூலிலுள்ள விடயங்கள் யாவும் மாக்சினால் முன்வைக்கப்பட்ட தத்துவார்த்தசிந்தனைகள் சார்ந்தவையாகும். எனவே இந்நூல் மெய்யியல் வாசகர்களுக்கு பயன்பெறும் வகையில் மெய்யியல்சார் பகுப்பெண்ணில் ஒழுங்குபடுத்துவதே சிறப்பாகும். எனவே மாக்ச்சிய தத்துவார்த்த கருத்துக்களை பிரதிபலிக்கும் தகவல் சாதனங்களை மெய்யியல்சார் பகுதியில் ஒழுங்கமைப்பதே சிறப்பு.

**இருமைவாதம்**

இதுபோன்று DDC யின் 147.4 எனும் பகுப்பெண் Dualism (இருமைவாதம்) பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. (Dewey, 2011). மேலைத்தேய மெய்யியலில் இருமைவாத கோட்பாடு டேக்காட்டினால் (Descartes) முன்வைக்கப்பட்டது. இருமைவாதம் என்பது உடல் - உளம் (Body – Mind) எனும் இரு விடயங்கள் பற்றி ஆராயும் கோட்பாடாகும். இங்கு உடலுக்கும் உளத்துக்குமான தொடர்புகள், அவை ஒவ்வொன்றினதும் இயல்புகள், இயக்கங்கள் போன்ற மெய்யியல் சார்ந்த பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன. இவ்வாறு உடல், உளம் பற்றிய

இருமைவாத கருத்துக்களை ஆராயும் நூல்கள் இங்கு அதாவது 147.4 வகுப்பெண்ணின் கீழ் வகைப்படுத்துமாறு னுனுஊ குறிப்பிடுகிறது. இதேவேளை 211.33 எனும் வகுப்பெண்ணின் கீழ்வரும் விடயமும் Dualism (இருமைவாதம்) என DDC குறிப்பிடுகிறது. (Dewey, 2011).உண்மையில் 200 எனும் வகுப்பெண்ணானது சமயம் (Religion) சார்ந்த பகுதியாகும். ஒரு நூலகர்(பகுப்பாளர்)மெய்யியலாளர்களின் (டேக்காட்டின்) இருமைவாதம் சார்ந்த நூல்களை இப்பகுதியில் ஒழுங்கமைக்கின்ற பொழுது அது வாசகரின் பயன்பாட்டுக்குரியதானதன்மையைப் பெறமுடியாது.உண்மையில் 211. 33 எனும் இப்பகுதியானது கீழைத்தேய தத்துவங்கள் குறிப்பிடும் இருமைவாதம் சார்ந்த இலக்கியங்களை குறிப்பிடும் பகுப்பெண்ணாகவே அமைகின்றது. உண்மையில் இருமைவாதம் என்பது ஓர் மெய்யியற் கோட்பாடாகும். எனவே மெய்யியல் சார்ந்த பாடப்பரப்புக்கு முக்கியத்துவம் அளித்தல் எனும் தன்மையினைக் கருத்திக் கொண்டு 181.4 எனும் பகுதியில் அதாவது இந்திய மெய்யியலோடு தொடர்புபட்ட பகுதியில் ஒழுங்கமைப்பதனூடாக மேலைத்தேய மெய்யியலுடனும் கீழைத்தே மெய்யியலுடனும் பரிட்சயமான வாசகர்கள் இருமைவாதம் சார்ந்த நூல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

**அனைத்திறைக் கொள்கை**

DDC யின் 147 எனும் வகுப்பெண்ணானது Pantheism அனைத்திறைக் கொள்கை அல்லது இயற்கை இறைவாதம் பற்றிக் குறிப்பிடுகிறது (Dewey, 2011). இவ்வகுப்பெண்ணில் அனைத்திறைக் கொள்கை பற்றிக் குறிப்பிடப்படும் மெய்யியலாளர்களின் படைப்புக்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். குறிப்பாக மேலைத்தேய சிந்தனையாளரான ஸ்பினோஷா (Spinoza) போன்ற சிந்தனையாளர்களின் கடவுள் பற்றிய சிந்தனைகளை குறிப்பிடும் ஆவணங்களை இப்பகுதியில் ஒழுங்குபடுத்தப்படலாம். இதேவேளை 211.2 (சமயவியல் சார்ந்த பகுதி) எனும் வகுப்பெண்ணும் ªantheism (அனைத்திறைக் கொள்கை) பற்றிக் குறிப்பிடுகிறது. (Dewey, 2011) உண்மையில் அனைத்திறைக் கொள்கை பற்றிக் குறிப்பிடும் இலக்கியங்களை 147 எனும் இட அமைவிலா?அல்லது 211.2 எனும் இட அமைவிலா? வகைப்படுத்துவது என்பது பற்றியதோர் பிரச்சினை இங்கு எழுகிறது. இந்நிலையில் ஓர் நூலகர் (பகுப்பாளர்) வாசகரின் பயன்பாட்டை அறிந்து அதற்கேற்ற வகையில் இந்நூல்களை ஒழுங்குபடுத்த முடியும்.

பொதுவாக அனைத்திறைக் கொள்கை என்பது சமய இலக்கியங்களிலேயே அதிகமாக குறிப்பிடப்பட்டிருக்கும். வேத உபநிடத இலக்கியங்கள் தொடக்கம் தற்கால சமய இலக்கியங்கள் பலவற்றில் அனைத்திறைக் கொள்கை சார்ந்த கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் மெய்யியலில் அனைத்திறைக் கொள்கை பற்றிய கருத்துக்களை நாம் தேடுகின்ற பொழுது அது ஸ்பினோஷாவின் இலக்கியங்களில் மட்டுமே காணக்கிடைக்கின்றது. எனவே அனைத்திறைக் கொள்கை என்பது பெரும்பாலும் சமயத்தையே உள்ளடக்கியதோர் கோட்பாடு எனும் வகையில் 211.2 எனும் வகுப்பெண்ணில் ஒழுங்குபடுத்துவதே சிறப்பாகும். அவ்வாறு ஒழுங்குபடுத்துகின்ற பொழுதே அது கூடுதல்

வாசகரின் பயன்பாட்டுக்குரிய தன்மையினைப் பெற முடியும் என்பதனை இங்கு நாம் குறிப்பிட முடியும்.

**அறிவுமுதல் வாதம்**

DDC யின் 149.7 எனும் இட அமைவானது Rationalism (அறிவுமுதல் வாதம் அல்லது நியாயவாதம்) எனும் விடயத்திற்கு ஒதுக்கப்பட்டதாகும். அறிவுமுதல் வாதம் என்பது மெய்யியலில் ஒரு பிரிவாகக் கொள்ளப்படும் அறிவாராட்சியியலில் அறிவினைப் பெறும் ஓர் கோட்பாடாகும். இக்கோட்பாட்டின்படி, மனிதன் பிறக்கின்ற போதே அறிவுடன் பிறக்கின்றான் எனவும் பின்னர் காலப்போக்கில் அவன் நியாயித்தலினூடாக அறிவினைப் பெறுகின்றான் எனவும் இது குறிப்பிடுகிறது. அதாவது அறிவினைப் பெறுவதற்கு நியாயத்தை (Reason) வற்புறுத்தும் கோட்பாடாக இது அமைகிறது. நவீன மெய்யியலாளர்களான டேக்காட், ஸ்பினோஷா, லைப்பினிஸ்ட் (Leibnitz) போன்ற சிந்தனையாளர்கள் அறிவுமுதல் வாதக் கருத்தினை வற்புறுத்தினர். எனவே மேற்படி மெய்யியலாளர்களின் அறிவாராய்ச்சியியற் கருத்துக்கள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன. இதேவேளை 211.4 எனும் வகுப்பெண்ணும் Rationalism (அறிவுமுதல் வாதம்) எனக் குறிப்பிடப்படுகிறது.உண்மையில் னுனுஊ யின் 149.7 எனும் வகுப்பெண்ணும் 211.4 எனும் வகுப்பெண்ணும் Rationalism (அறிவுமுதல் வாதம்) சார்ந்த நூல்களை ஒழுங்குபடுத்தும் பகுதியாகவே காணப்படுகின்றன. (Dewey, 2011). எனவே உண்மையில் அறிவுமுதல் வாதம் சார்ந்த நூல்களை DDC யினை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைக்கும் போது 149.7 இல் ஒழுங்கமைப்பதா? அல்லது 211.4 எனும் வகுப்பெண்ணின கீழ் ஒழுங்கமைப்பதா? எனும் தெளிவின்மை இங்கு ஏற்படுகிறது. உண்மையில் ஒரு பகுப்பாளா் Rationalism (அறிவுமுதல் வாதம்) சார்ந்த நூல்களை 149.7 எனும் பகுதியில் ஒழுங்குபடுத்துவது சிறப்பானதாக அமையும். ஏனெனில் அறிவுமுதல் வாதம் என்பது மெய்யியற்துறைசாா் விடயப்பரப்புக்குள்ளேயே கூடுதலாக இடம்பெறுவது அனுபவத்தினூடான உண்மை. அதைவிடுத்து சமயம் சாா்ந்த பகுதிக்குள் அதனை ஒழுங்குபடுத்துவது வாசகா்களுக்கு நிறைவான பயன்பாட்டை தரமுடியாது.

**பிரபஞ்சவியல்**

DDCapd; 113 எனும் குறியீடானது Cosmology (பிரபஞ்சவியல்) எனக் குறிப்பிடப்படுகின்றது. அதாவது இவ் வகுப்பெண் பிரபஞ்சவியல் சார்ந்த இலக்கியங்கள் வகைப்படுத்தும் பகுதியாக காணப்படுகிறது. பிரபஞ்சவியல் என்பது மெய்யியலின் உப பிரிவுகளான பௌதீகவதீதம் (Meta Physics),அறிவாராய்ச்சியியல் (Epistemology), பௌதீக மெய்யியல் (Philosophy of Physics), விஞ்ஞான மெய்யியல் (Philosophy of Science), (Philosophy of Mathematic) கணித மெய்யியல் போன்ற துறைகளுடன் தொடர்புபட்டதாக விளங்குகிறது. பிரபஞ்சவியலானது (ஊழளஅழடழபல) பிரபஞ்சத்தின் தோற்றம், அதன் இருப்பு, அதன் செயற்பாடு, மனிதன் எவ்வாறு பிரபஞ்சத்தினை விளங்க முடியும் போன்ற விடயங்களை ஆராயும் பகுதியாகும்.

இவ்விடயங்கள் சார்ந்த இலக்கியங்களை 113 எனும் வகுப்பெண் பிரபஞ்சவியலின் கீழ் ஒழுங்குபடுத்தக்கூடியதாக இருக்கும் அதேவேளை 523.1 எனும் வகுப்பெண்ணும் Cosmology (பிரபஞ்சவியல்) எனக் குறிப்பிடப்படுகிறது. எனவே பிரபஞ்சவியல் சார்ந்த விடயங்களை ஆராயும் நூல்களை 113 என்னும் வகுப்பெண்ணின் கீழா? அல்லது விஞ்ஞானம் பற்றி ஆராயும் 523.1 எனும் வகுப்பெண்ணின் கீழ் ஒழுங்கமைப்பதா? என்பது போன்ற பிரச்சினைகள் இங்கு ஏற்படுகின்றன.

பகுப்பாக்கத் திட்டமொன்றில் பகுப்பெண் வழங்கும்போது அனைத்துப் பிரதான துறைகளோடும், தேவை ஏற்படும்போது நியம உபபிரிவுகளிலிருந்தும் இணைப்பெண்ணைப் பெற்று முதன்மைப்படுத்தப்பட்ட நிலையில் வகுப்பெண்ணை வழங்கி ஒழுங்குபடுத்த முடியும். எவ்வாறாயினும் ஆவணங்கள் அல்லது நூல்கள் கூடுதலாக எத்துறைக்குப் பொருத்தமானது என பகுப்பாளர் ஆராய்ந்து முடிவெடுப்பார். எனவே மெய்யியல் ஆவணங்களை முதன்மைப்படுத்தும் நிலையில் 113 என்னும் வகுப்பெண்ணின் கீழ் ஒழுங்கமைப்பதன் ஊடாக குறித்த துறைசார் வாசகர்களுக்கு அதன் பயன்பாடு சிறப்பானதாக அமையும். உண்மையில் 113 எனும் பகுதியில் ஒழுங்கமைப்பதனூடாக தத்துவத்துறை சார்ந்த வாசகர்களுக்கு அதன் பயன்பாடு சிறப்பாக கிடைக்கும்.

**இருப்புவாதம்**

மேலும் 142.78 எனும் DDC குறியீடானது இருப்புவாதம் (Existentialism) பற்றிக் குறிப்பிடுகின்றது. இருப்பு வாதம் என்பது பின்நவீன காலத்தில் மேலைத்தேய மெய்யியலில் முன்வைக்கப்பட்ட ஒரு கோட்பாடாகும். இது தனி மனித இருப்பினை முதன்மைப்படுத்துவதுடன் அவனது ஆளுகைக்கு அப்பாற்பட்ட விடயங்களை மறுக்கிறது. குறிப்பாக பௌதீகவதீதம் சார்ந்த விடயங்களை மறுக்கிறது (கடவுள், ஆன்மா, மறுபிறப்பு). இப்பகுதியில் Jean Paul Sartre (ஜீன் போ்ல் சாத்ரே) Martin Heidegger (மார்டின் கைடெக்கர்) Friedrich Nietzsche (பிரட்ரிக் நீட்ஷே) போன்ற சிந்தனையாளர்களின் சிந்தனைகளை நாம் இப்பகுதியில் ஒழுங்கமைக்க முடியும். ஆனால் 149.8 எனும் குறியீடானது ஙோடைளைஅ பற்றிக் குறிப்பிடுகிறது. Nihilism என்பது Nietzsche யினால் முன்வைக்கப்பட்ட கோட்பாடாகும். Nihilism என்பது உண்மையில் எதுவுமே இருப்பில் இல்லை என்பதனை வற்புறுத்துகின்றது. மேலும் இக்கோட்பாடானது பௌதீகவதீத விடயங்களான சமய நம்பிக்கைகள், ஒழுக்க கோட்பாடுகள் போன்றவற்றை நிராகரிப்பதுடன் தனிமனித இருப்புக்கும் அவனது ஆளுகைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு கோட்பாடாக விளங்குகிறது. உண்மையிலே Nihilism சார்ந்த இலக்கியங்களை 149.8 எனும் வகுப்பெண்ணின் கீழ் ஒழுங்கமைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. இவ்விலக்கியங்களை நீட்சேயின் இருப்புவாதம் பற்றிக் குறிப்பிடும் பகுதியான 142.78 எனும் வகுப்பெண்ணின் கீழ் வகைப்படுத்துவது மிகவும் சிறப்பானதாக அமையும்.

**காட்சிச் செயற்பாடு**

மேற்குறிப்பிட்டவைகள் மட்டுமன்றி மேலும் சில பாடப்பரப்பு சார்ந்த இலக்கியங்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்துச் செல்கிற குறியீடுகளாக DDC யின் 23ம் பதிப்பில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டுக்களாக, 152.1 எனும் வகுப்பெண்ணானது Sensory Perception (புலக்காட்சி) சார்ந்த விடயங்களைக் குறிப்பிடும் இலக்கியங்களை ஒழுங்கமைக்கும் பகுதியாக வகுக்கப்படுகின்றது. அதே வேளை, 152.7 எனும் வகுப்பெண் Perceptual Processes (காட்சி செயற்பாடு) பற்றிக் குறிப்பிடுகிறது. ஆனால் 152.1 எனும் வகுப்பெண்ணிலே நாம் இது சார்ந்த இலக்கியங்களை வகைப்படுத்துவது சிறப்பானதாகவும், இலகுவானதாகவும் கால தாமதத்தினை குறைக்கக் கூடியதாகவும் இருக்கும். மேலும் 148, மற்றும் 320.51 எனும் இரு குறியீடுகளும் டுடைநசயடளைஅ (விடுதலை வாதம்) பற்றியதாகவே காணப்படுகின்றது. (Dewey, 2011) மேலும் 127, மற்றும் 154 ஆகிய இரு குறியீடுகளும் Sub- Conscious நனவிலி மனம் பற்றிக் குறிப்பிடும் இலக்கியங்களின் இட அமைவாகக் காணப்படுகிறது. (Dewey,2011) அது போன்று 149.3, 204.22 போன்ற பகுதிகள் Mysticism (அனுபூதிக் கொள்கை) பற்றிக் குறிப்பிடும் இட அமைவுகளாக காணப்படுகின்றது. (Dewey, 2011)

**பரிந்துரைகள்**

மேற்கூறப்பட்டதான குழப்பமான போக்கை சீர்செய்வதற்காக இவ்வாய்வு பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கிறது.

அ. எந்தப் பகுதி வாசகர்களுக்கு குறித்த நூலின் பயன்பாடு அதிக பயனளிக்கும் என்பதை அவதானித்து அதனடிப்படையில் குறித்த நூல்களை நூலகத்தில் வகைப்படுத்திக் கொள்ள முடியும். எடுத்துக்காட்டாகஇ நாம் ஏலவே குறிப்பிட்டுள்ளபடி, முத்துமோகனின் *மாக்சிய கட்டுரைகள் (335.4) மற்றும்* Iovchuk,M. *யின் Philosophical Tradition Today (335.411)* போன்ற நூல்களை பொருளியல் சார்ந்த வகுப்பெண்ணில் வகைப்படுத்துவதை விடுத்து மெய்யியல் சார்ந்த வகுப்பெண்ணில் வகைப்படுத்துவதனூடாக வாசகர் கூடுதல் பயனைப் பெறமுடியும்.

ஆ. நூலகத்தில் தெளிவான முறையில் விடத்தலையங்கங்களை உருவாக்கம் செய்து வாசகரை அதனை நோக்கி வழிப்படுத்துவதன் மூலம் வாசகர் சரியான தகவல்களைப் பெறமுடிவதோடு காலதாமதத்தினையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

இ. நூலகத்தில் தொழிநுட்ப பிரிவு பொருத்தமான விடயத்தலைப்புக்களைச் சீரான முறையில் வடிவமைத்துக் கணனிமயப்படுத்துவதனூடாக வாசகர் குறித்த நூலின் இடஅமைவினை இலகுவாக கண்டறிய முடியும்.

ஈ. நூலகத்தில் பொருத்தமான பகுதிகளுக்கு பொருத்தமான துறைசார்ந்த நூலகர்களை நியமிப்பதனூடாக நூலகத்தில் தெளிவின்மையையும் குழப்பத்தினையும் தவிர்க்க முடியும்.

உ. நூலகத்தில் கல்விசாரா ஊழியர்களுக்கும் விடயம்சார் சரியான அறிவுறுத்தல்களையும் பயிற்சிகளையும் வழங்குவதன் ஊடாக வாசகர் சரியான பயனைப் பெற வழிகாட்ட முடியும்.

**ஆய்வின் முடிவாக**

நூலகமொன்றில் குறித்த நூல்கள் சரியான இடத்தில் இறாக்கைப்படுத்தப்படவில்லை எனின் அது தொலைந்த நூலுக்கு சமமானதாகவே கருதப்படும். இன்று பெரும்பாலும் நடைமுறையிலுள்ள தூயிதசம பாகுப்பாக்க திட்டத்தின் அடிப்படையில் நூலகங்களில் தகவல் சாதனங்களை ஒழுங்கமைக்கும்போது சில கூறியது கூறல் சார்ந்த பிரச்சினைகளும் தெளிவின்மைகளும் ஏற்பட்டாலும் தூயிதசம பாகுப்பாக்க முறையினை ஒழுங்கமைப்புக்கான ஓர் கருவி நூல் எனும் அடிப்படையில் அதனை நாம் புறந்தள்ளவும் முடியாது. எனவே ஓர் நூலகர் நூலகத்தில் தகவல் சாதனங்களை ஒழுங்கமைக்கும் போது தூயிதசம பாகுப்பாக்க முறையின் வரையறைக்குள் நின்று கொண்டு மேலே கூறப்பட்ட பரிந்துரைகளை பின்பற்றுவதனூடாக நூலக ஒழுங்கமைப்பினை செம்மைப்படுத்த முடியும் இதனூடாக வாசகர் தேவையான பயனைப் பெற முடியம் என்பதனை இவ்வாய்வு முடிவாக குறிப்பிடுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


Chan, L.M. (2005). *Library of Congress Subject Heading: Principles and application.* Westport: Libraries unlimited publications.

Dewey, M. (2011). *Dewey decimal classification and Relative index (23 ed.)*. Ohio, Dublin: OCLC Online Computer Library Center.

*Library of Congress Subject Heading (Vol.1, II, III)* (1990). Washington, DC: Cataloging Distribution Service, Library of Congress.

Parkinson, G. H. R. (1993). *The Renaissance and Seventeenth - Century Rationalism*. London & New York : Rutledge.

Radhakrishnan, S. (1957). *History of Philosophy- Eastern and Western. Vol-II,* London: George Allen & Unwin Ltd.

Rovira, C & Reyes, C. (1986). *Sears List of Subject Headings (13$^{th}$ed.).* New York: The H.W. Wilson Company.

Runes, D.D. (1942). *The Dictionary of Philosophy*. New York: Philosophical Library.

Russell, B. (1948). *History of Western Philosophy*. George Allen and Unwin Ltd, London.

Woolf, H.I. (1929). *Philosophical Dictionary,* New York: Alfred A.Knopf.

சிறிகாந்தலட்சுமி, அ. (2005). *நூலக பகுப்பாக்கம் நூலகர் கைந்நூல்.* யாழ்ப்பாண நூலக விழிப்புணர்வு நிறுவகம்.

மெய்யியல் பாடதிட்டம் பேராதனை பல்கலைக்கழகம் Retrived from http://arts.pdn.ac.lk/philosophy/prog/under.php (;).

மெய்யியல் பாடதிட்டம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் Retrived from http://www.arts.jfn.ac.lk/index.php/course-philosophy/( Htt://www.iep.utm.edu/epistemo/…